RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt2137

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

அனுமனும் வீரவாகுதேவரும்

த. ஜெயலட்சுமி [அ,*]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சேலம்-636016, தமிழ்நாடு, இந்தியா

Hanuman and Veeravakudevar

T. Jayalakshmi [a,*]

[a] Department of Tamil, Sri Sarada College for Women (Autonomous), Salem-636016, Tamil Nadu, India.

* Corresponding Author:
jayapraneshan@gmail.com

Received : 31-10-2020
Revised : 12-06-2021
Accepted : 26-06-2021
Published : 15-07-2021

ABSTRACT

Contributions of Tamil Bhakti poets to the literature have been significant in the past along with the contributions that they made to the social upliftment of the society. Ramavataram, popularly referred to as Kamba Ramayanam, is a Tamil epic that was written by the Tamil poet Kambar based on sanskrit version of Valmiki Ramayanam that describes the life of King Rama of Ayodhya. In this epic Hanuman is a imporatant character. The Tamil poet Kachiyappa sivachariyar greatest composition is the Kandha puranam based on sanskrit version of Sivasankara sangithai. The great warrior Veerabagu Dhevar is close associate of Lord Muruga. This article mainly focuses on stunning similarities between the supernatural powers of the ardent devotee, dedicated Hanuman described in Kamba Ramayanam and Veerabagu Dhevar in kandha puranam.

Keywords: Bhakti Literature, Kamba Ramayanam, Hanuman, Kandha puranam, Veerabagu Dhevar

முன்னுரை

கம்பராமாயணத்தில் அனுமனை இராமபிரானிடம் மிகுந்த பக்தி கொண்டவராகக் கம்பர் படைத்துள்ளார். நவசக்திகள் பெற்ற ஒன்பது வீரர்களுள் முதன்மையானவராகத் திகழும் வீரவாகுதேவர் கந்தபுராணத்தின் தொடக்கம் முதல் இறுதி வரை முருகப்பெருமானிடம் கொண்ட பக்தியிலிருந்து பிறழாமல் அதீத பக்திக் கொண்டவராகக் கச்சியப்பர் படைத்துக் காட்டியுள்ளார். அனுமன், வீரவாகுதேவர் ஆகிய இருவரும் பக்தி செலுத்துவதிலும் மீவியல் ஆற்றலிலும் ஒருவரையொருவர் விஞ்சியவராகக் காட்சியளிக்கின்றனர். அனுமனைக் கம்பர் இராமாயணத்திலும் வீரவாகுதேவரைக் கச்சியப்பர் கந்தபுராணத்திலும் பல இடங்களில் பக்தி மேலீட்டால் நிகழ்ந்த செயல்பாடுகளைச் சிறப்பித்துள்ளனர். அனுமன் மற்றும் வீரவாகுதேவர் ஆகிய இருவருக்குமிடையே உள்ள ஒற்றுமைகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அனுமனும் வீரவாகுதேவரும்

மாருதி, ஆஞ்சநேயன் ஆகிய பெயர்களால் அழைக்கப்படும் அனுமன் கம்பராமாயணத்தில் சுந்தரகாண்டத்திலுள்ள கடல்தாவு படலம் முதல் திருவடிதொழுத படலம் வரை உள்ள பதினான்கு படலங்களிலும் தொண்டின் உறைவிடமாகவும் பக்தியின் முழு வடிவமாகவும் விளங்குகிறான். அனுமன் கடலைக் கடந்து, இலங்கையைத் தேடி, அங்குள்ள சீதாபிராட்டியைக் கண்டு, கணையாழியைக் கொடுத்து, அரக்கரை வதைத்து, இராவணன் செருக்கைக் குலைத்து, மீண்டு வந்து

இராமன் பாதத்தை வணங்கி உயர்வு பெறுவதைச் சுந்தரகாண்டம் விளக்குகிறது. நான், எனது என்னும் செருக்கற்ற நிலை, புலனடக்கம், தொண்டு மனப்பான்மை ஆகிய பண்புகள் நிறைந்தவனாக அனுமனைக் கம்பர் காட்டியுள்ளார். குறிப்பாகத் தொண்டு என்ற சொல்லின் முழு வடிவமாக அனுமன் கம்பரால் படைக்கப்பட்டுள்ளான். க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி அனுமனைப் பற்றி, "இராமாயணத்தில் இராமனுக்கு உதவிப்புரிந்த வானர இனத்தைச் சேர்ந்த கடவுளாக வணங்கப்படும் பாத்திரம்" (ப.90) என்று குறிப்பிட்டுள்ளது (Poovannan, 2000).

வீரவாகுதேவரின் பேராற்றலை விளக்குவதாகக் கந்தபுராணத்திலுள்ள மகேந்திரகாண்டம் திகழ்கிறது. மகேந்திரகாண்டத்திலுள்ள இருபத்தொரு படலங்களில் சூரன் நகர்புரிபடலம் மற்றும் சூரன் அமைச்சியல் படலம் தவிர மற்ற பத்தொன்பது படலங்களிலும் வீரவாகுதேவரின் ஆற்றல்களைக் கச்சியப்ப சிவாசாரியார் போற்றிப் பாடியுள்ளார். வீரவாகுதேவரைப் பற்றித் தமிழ்மொழியகராதி, பார்வதி தேவியாருடைய காலில் அணிந்த சிலம்பில் நின்றும் சிந்திய நவரத்தினங்களும் நவசக்திகளாகிச் சிவத்தை இச்சித்து நோக்கி, தனித்தனியாக ஒவ்வொரு புத்திரரை ஈன்றார்கள். அவருள் முதற் சக்தியாகிய இரத்தினக் கன்னிகை ஈன்ற புத்திரனார் இந்த வீரவாகுதேவர். இவர் முருகக்கடவுள் சூரபன்மனைச் சங்கரிக்க அவதரித்த போது அவருக்குச் சேனாதிபதியாயிருந்து சூரசங்காரத்திற்குப் பேருதவியாயிருந்தார் (ப.1320) என்று குறிப்பிடும் (Manickam, 1990).

தூது

வேந்தர் இருவர் போர் தொடங்குவதற்கு முன்பு தங்களுக்குள் இருக்கும் பகையைப் போரில்லாமல் முடித்துக் கொள்ள எண்ணம் கொண்டு தூது அனுப்புகிற வழக்கம் தொன்றுதொட்டு நம் நாட்டில் இருந்து வந்திருக்கிறது. தூது பற்றிய செய்திகளைத் தொல்காப்பியமும் அகநானூறும் பதிவு செய்துள்ளதைக் கீழ்க்காணும் வரிகள் உறுதிப்படுத்தும் (Ilampooranar, 1985).

"ஓதல் பகையே தூதிவை பிரிவே" (தொல். பொருள். நூ.27)

"அவற்றுள்

ஓதலுந் தூதும் உயர்ந்தோர் மேன" (தொல். பொருள். நூ.28)

"தூதொய் பார்ப்பான் மடிவெள் ளோலை

படையுடைக் கையர் வருதிற நோக்கி" (அகம். பா.337:7,8)

தூது செல்வோருக்கு அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை ஆகிய மூன்றும் இன்றியமையாதவை என்பதைத் திருவள்ளுவரும் குறிப்பிட்டுள்ளார். இதனை,

"அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்

கின்றி யமையாத மூன்று" (குறள்.682)

என்ற குறள் வழி அறியலாம். இதிலிருந்து பண்டையத் தமிழர் தூதின் சிறப்பை நன்கு அறிந்திருந்தனர் என்பதை அறியமுடிகின்றது (Acharya, 2013). இம்மரபைப் பின்பற்றிக் கம்பராமாயணத்தில் சொல்லின் செல்வனான அனுமன் சீதையைச் சந்தித்துக் கணையாழியைக் கொடுத்தப் பின்னர் சீதையைச் சிறைப்படுத்தி வைத்திருக்கும் இலங்கை வேந்தன் இராவணனை அவனது அரசவையில் சந்தித்துச் சீதையை விடுவிக்குமாறு கூறுகிறான். இல்லாவிடில் இராமன் போர் தொடுக்க வேண்டி இருக்கும் என்பதையும் தூதுவனாக அனுமன் தெரிவிக்கிறான். இதனை,

"..... தன் அரும் பெறல் செல்வமும்,

ஓது பல் கிளையும், உயிரும் பெற,

சீதையைத் தருக" என்று எனச் செப்பினான்,

சோதியான் மகன், நிற்கு' எனச் சொல்லினான்" (கம்ப.5:106)

என்ற கம்பராமாயணப் பாடல் விளக்கும். சீதையை விடுவிக்காவிடில் உனது செல்வம் முதலிய அனைத்தும் தொலையும் என்று அனுமன் இராவணனுக்கு உணர்த்தினான். அத்துடன் நில்லாது அறமொழிகளையும் உபதேசங்களையும் பலவாறு எடுத்துக் கூறினான்.

கந்தபுராணத்தில் போர் தொடுக்காமலேயே தேவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்க, முருகப்பெருமான் வீரவாகுதேவரைச் சூரபன்மனிடம் தூது அனுப்பியுள்ளார். இதனை,

"மயேந்திர மூதூ ரேகி வல்லைநீ அமலன்; நல்கும்
சயேந்திர ஞாலத் தேரோன் தனையடுத் தொருநாற் றந்தக்
கயேந்திரன் மதலை வானோர் காப்பைவிட்ட றத்தா றுன்னி
நயேந்திர வனத்தி னோடும் உறைகென நவிறி யன்றே" (கந்த.பா.3723)

"அம்மொழி மறுத்து ளானேல் அவுணநின் கிளையை யெல்லாம்
இம்மென முடித்து நின்னை எஃகவேற் கிரையா நல்கத்
தெம்முனை கொண்டு நாளை செல்லுதும் யாமே யீது
மெய்ம்மைய தென்று கூறி மீள்கென வீரன் சொல்வான்" (கந்த.பா.3724)

ஆகிய கந்தபுராணப் பாடல்கள் வழி போருக்குப் புறப்படும் முன், தேவர்களைச் சூரபன்மன் சிறையிலிருந்து விடுவித்து விட்டால், முருகப்பெருமானிடமிருந்து சூரன் உயிர் பிழைக்க ஏதுவாக இருக்கும் என்பதற்காக, வீரவாகுதேவரைத் தூதாக அனுப்பியதாகக் காட்டுதல் தமிழரின் போர் முறையைப் புறமரபைக் கச்சியப்பர் போற்றும் விதமாக அமைந்துள்ளது. தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்து விட்டால் நீயும் உன் சுற்றத்தாரும் உயிர் பிழைப்பர் என்று வீரவாகுதேவர் முருகப்பெருமான் கூறிய செய்திகளைச் சூரனிடம் கூறியதோடு நில்லாமல் பெருமானின் சிறப்புகளையெல்லாம் பலவாறாகச் சூரனுக்கு எடுத்துரைக்கிறார். இந்நிலையில் வகுத்துக் கூறல், கூறியது கூறல், ஓலை கொடுத்து நிற்றல் என்ற மூவகைத் தூது நிலையில் அனுமனும் வீரவாகுதேவரும் கூறியது கூறல் மற்றும் வகுத்துக் கூறல் என்ற நிலைகளில் சிறந்த தூதர்களாகத் திகழ்வதைக் காண முடிகின்றது (Poovannan, 2000).

மலையை பிளத்தல்

இலங்கையிலுள்ள சீதாபிராட்டியைக் காண அனுமன் கடலைக் கடக்க முற்படுவதற்கு முன்பு மகேந்திரமலையில் தன் பாதத்தைப் பதித்தான். அப்பொழுதே அம்மலை தகர்ந்து சரிந்து வெடித்தது. அதைக் கம்பர்,

"தேக்கு உறுசிகரக் குன்றம் திரிந்துமெய் நெரிந்து சிந்த" (கம்ப.5:7)

"வெயில்இயல் குன்றம் கீண்டு வெடித்தலும்" (கம்ப.5:11)

என்ற வரிகளில் புலப்படுத்தியுள்ளார்.

"அலங்கல்தாழ் மார்பன் முன்தாழ்ந்து
அடித்துணை அழுத்தலோடும்
பொலன்கெழு மலையும் தாளும்
பூதலம் புக்க மாதோ" (கம்ப.5:15)

என்ற கம்பரின் வரிகள் அனுமன் இரண்டு திருவடிகளையும் ஊன்றியவுடன் பொன் மயமான மகேந்திரமலையும் அதன் அடிச்சாரலும் பூமியின் அடித்தளத்தைச் சென்று சேர்ந்ததை உணர்த்துகின்றன.

இதைப் போன்று கந்தபுராணத்தில் சூரபன்மனிடம் தூது சென்ற வீரவாகுதேவர் கந்தமாதன மலையின் மீது ஏறி நின்றதும், அந்த மலை அவரைச் சுமக்க மாட்டாது நடுங்கியதைக் கச்சியப்பர்,

"நெடுங்கிரி மிசைபோய் வீரன் நிற்றலும் பொறையாற் றாது

நடுங்கிய துருமுற் றென்ன நனிபகிர் வுற்ற தங்கள்

ஒடுங்கிய மாவும் புள்ளும் ஒல்லென இரிந்த வன்றே" (கந்த.பா.3732)

என்ற பாடலில் சுட்டியுள்ளார். மேலும் அந்த மலை இடி விழுந்தது போல பிளந்து ஆழ்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

"ஆடல்கெழு மொய்ம்பினன் அடித்தலம தூன்ற

மூடுதிரை வேலையிடை மூழ்கிய இலங்கை" (கந்த.பா.3804)

என்ற பாடலில் வீரவாகுதேவர் இலங்கையின் மீது குதித்ததும் இலங்கை கடலில் மூழ்கியதாகவும் இலங்கையை விட்டு அவர் மேல் எழுந்ததும் இலங்கையும் மேலெழுந்ததாகவும் கச்சியப்பர் பாடியுள்ளார். "மனித ஆற்றலுக்கு மேம்பட்டும், அப்பாற்பட்டும் நிகழுகின்ற நிகழ்ச்சிகளை மீவியல் நிகழ்ச்சிகள் என்கின்றோம். இத்தகைய நிகழ்ச்சிக்குரிய காரண காரியங்கள் இயல்நிலைக்கு மாறுபட்டும் அறிவாராய்ச்சிக்கு அப்பாற்பட்டதாகவும் இருப்பதால் இவற்றை மீவியல்நிலை எனக் கொள்வதில் தவறில்லை" (கந்தபுராண ஆராய்ச்சி ப.145) என்று அ. பாண்டுரங்கன் கூறிய கருத்தும் இங்கு இணைத்துப் பார்க்கத்தக்கது.

இங்ஙனம் அனுமன் மகேந்திரமலையில் தன் பாதத்தை அழுத்தியதால் அம்மலை வெடித்ததாகவும் வீரவாகுதேவரைச் சுமக்க முடியாமல் கந்தமாதன மலை பூமியில் அழுந்தியதாகவும் வீரவாகுதேவர் இலங்கையின் மீது குதித்ததும் இலங்கை கடலில் மூழ்கியதாகவும் கூறப்பட்டுள்ளவை அனுமன் மற்றும் வீரவாகுதேவரின் மீவியல் ஆற்றலைப் பிரதிபலிப்பதாக உள்ளது (Ramalingam, 1988).

பேருரு கொள்ளல்

இராமபிரான் மீது கொண்ட பக்தியின் மேலீட்டால் அனுமன் பேருரு கொண்டதைக் கம்பர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். அனுமன் தன் மேனி உயருமானால் அண்டமுகடு இடிக்கும் என்று கருதிக் குனிந்த தலையையுடையவனாய்த் தன் வடிவத்தைச் சீதாபிராட்டிக்குச் சுட்டிக்காட்டி நின்றதையும் அரக்க சேனைகளை அணிவகுத்து நின்ற பஞ்சசேனாபதிகளைக் கண்ட அனுமன் ஆகாயத்தைக் கடந்து செல்ல உருவத்தைப் பெரிதாக்கியதையும் முறையே கம்பர் கீழ்க்காணும் பாடல்களில் உணர்த்தியுள்ளார்.

"விட்டு உயர் தோளினன் விசும்பின் மேக்கு உயர்

எட்ட அரு நெடு முகடு எய்த நீளுமேல்

முட்டும் என்று உருவொடு வளைந்த மூர்த்தியான்" (கம்ப.5:586)

"ஆயிடை, அனுமனும், அமரர்கோன் நகர்

வாயில்நின்று அவ் வழிக் கொணர்ந்து வைத்த மாச்

சேயொளித் தோரணத்து உம்பர், சேண் நெடு

மீ உயர் விசும்பையும் கடக்க வீங்கினான்" (கம்ப.5:894)

சூரபன்மனின் வீரமகேந்திரத்திற்கு வீரவாகுதேவர் செல்ல எண்ணி, முருகப்பெருமானின் திருவுருவத்தை நினைத்து பேருருவத்தைக் கொண்டதைக் கச்சியப்பர்,

"திருவுரு வதனை உன்னிச் செங்கையால் தொழுது மாலும்

பிரமனும் வியந்து நோக்கப் பேருருக் கொண்டு நின்றான்" (கந்த.பா.3742)

என்று குறிப்பிடுவார். மற்றொரு முறை வீரவாகுதேவர், சூரபன்மனின் அவை மண்டபத்தையும் நகரத்தையும் அழிக்க எண்ணி முருகப்பெருமானின் திருவடிகளைத் தியானித்து அப்பெருமானின் அருளுடன் பேருரு எடுத்தார் என்பதை,

"சுடரும் வேற்படைத் தொல்கும ரேசன

தடிகள் முன்னி அருளுடன் ஆண்டகை

படிய ளந்திடு பண்ணவ னாமென

நெடிய பேருருக் கொண்டுநின் றனரோ" (கந்த.பா.4373)

என்ற பாடலில் புலப்படுத்தியுள்ளார். போர்க்களத்தில் திவிட்டன் பேருரு கொண்டதை,

"காயெரி சுடர்விட் டாங்குக்

கனன்றனன் கனல லோடு

மாயிரு விசும்பு மஞ்சும்

வடிவினன் வள்ள லானான்" (சூளா.பா.1436)

என்று சூளாமணி குறிப்பிட்டுள்ளதும் இங்கு நினைவுகூரத்தக்கது. இங்ஙனம் பக்தியின் சிறப்பால் அனுமன், வீரவாகுதேவர் ஆகிய இருவரும் தேவைப்படும் சமயத்தில் தங்கள் உருவத்தைப் பெரிதாக மாற்றிக் கொள்ளும் இயல்புடையவர்களாகத் திகழ்வதைக் காணமுடிகின்றது.

ஆகாயத்தில் செல்லல்

அனுமன் வான் வழியே சென்றதை இராமாயணத்தில் கம்பர் பதிவுசெய்துள்ளார். அனுமன் மலையிலிருந்து மேலெழுந்து ஆகாயத்தில் சென்ற காட்சியை,

"---------- 'விண்டு

காலினால் அளந்த வான

முகட்டையும் கடக்கக் கால

வாலினால் அளந்தான்' என்று

வானவர் மருளச் சென்றான்" (கம்ப.5:32)

என்ற பாடலில் கம்பர் திருமாலின் திருவடியால் அளந்த வானத்தின் உச்சியைக் கடப்பதற்குக் காலபாசம் போன்ற வாலினால் அளந்தான் என்று தேவர்கள் வியப்படைய அனுமன் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார். அங்காரதாரை என்ற அரக்கியின் வயிறை இரண்டாகப் பிளந்த பின் அனுமன் வான் வழியே சென்றதை,

"..... மேருகிரி கீழா

நீண்டான் வயக்கதி நினைப்பின்நெடி தென்னப்

பூண்டான் அருக்கன் உயர்வானின்வழி போனான்" (கம்ப.5:86)

என்ற வரிகளில் உணர்த்தியுள்ளார். இலங்கையிலிருந்து தப்பிப் போதற்குரிய சமயம் பார்த்திருந்த அனுமன் இராமபிரானின் திருவடிகளை வணங்கித் துதித்து ஆகாயம் வழியாக விரைந்து சென்றதைக் கீழ்க்காணும் கம்பராமாயண வரிகள் உணர்த்துகின்றன.

"..... இரண்டு நூறாயிரம் புயத் தடக்கை தாம்போடு

எழுஎன நால விண்மேல் எழுந்தனன் விழுந்த எல்லாம்" (கம்ப.5:1177)

"வீரன் பூங்கழல் தொழுதுவாழ்த்தி விசும்பிடைக் கடிது போனான்" (கம்ப.5:1247)

இதே போன்று வீரவாகுதேவர் ஆகாயத்தின் வழியாகச் சென்றதாகக் கச்சியப்பர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். கந்தமாதன மலை மீது நின்ற வீரவாகுதேவர் வானத்தில் எழுந்து கடலைக் கடந்து சென்றதை,

"கிரிமிசை நின்ற அண்ணல் கிளர்ந்துவான் எழுந்து" (கந்த.பா.3765)

".... ஆயிரம் யோசனை வானிடைப் பெயர்ந்து

பொன்னு லாவுறு வாகையம் புயத்தவன் புலவோர்

ஒன்ன லானுறை மகேந்திர வரைப்பின்முன் னுற்றான்" (கந்த.பா.3872)

"நனந்த லைப்பட நகரத்து விண்ணிடை நடந்தான்" (கந்த.பா.4043)

ஆகிய சான்றுகளால் அறியலாம். இதைப் போன்று மணிமேகலையும் வான் வழியாகச் சென்றதற்குச் சீத்தலைச்சாத்தனாரின் கீழ்க்காணும் வரிகள் சான்றாகும்.

"மாபெரும் பாத்திரம் மலர்க்கையில் ஏந்திக்

கோமகன் பீடிகை தொழுது வலங்கொண்டு

வானூ டெழுந்து மணிமேகலை தான்" (மணி.11:127)

"அணியிழை யந்தர மாறா வெழுந்து" (மணி.26:1)

இதிலிருந்து காவியங்களில் இடம்பெறுவோர் ஆகாய மார்க்கமாகச் செல்வதையும் படைப்பாளர்கள் இயல்பாகக் காட்டியுள்ளதை அறியலாம் (Venkatasamy Naataar, & Duraisamy Pillai, 1985).

அணு உருவெடுத்தல்

இலங்கையிலுள்ள கொடிய அரக்கர்கள் தன்னை எதிர்த்தாலும் எதிர்ப்பர் என்று எண்ணிய அனுமன் தன் உருவைச் சுருக்கிக் கொண்டு சென்றதை,

"---------- அரக்கர் வந்து

நேரினும் நேர்வர் என்னாத்

தன்தகை அனைய மேனி

சுருக்கிஅச் சரளச் சாரல்

குன்றிடை இருந்தான்" (கம்ப.5:136)

என்ற பாடலில் கம்பர் விளக்கியுள்ளார். கந்தபுராணத்தில் வீரமகேந்திரத்தின் தெற்கு பக்க வாயிலைக் காத்து வந்த கயமுகன் இறந்ததைக் கண்டு அவுணர்கள் பலர் போருக்கு வந்தனர். அவர்களுடன் போரிட்டால் வெல்வதற்குப் பல நாட்களாகும் என்று எண்ணிய வீரவாகுதேவர் முருகப்பெருமானின் திருவடிகளை மனதில் துதித்து அவர் திருவருளால் ஓர் அணுவின் வடிவு கொண்டார். இதனை,

"நொய்யதோர் அணுவின் ஆற்ற நுணுகியும் மேன்மை தன்னில்

பொய்யில்சீர் பெருமைத் தாயும் பூரண மாகி வைகுஞ்

செய்யதோர் குமரன் பொற்றாள் சிந்தைசெய் தன்பிற் போற்றி

ஒய்யென அருளின் நீரால் ஓரணு வுருவங் கொண்டான்" (கந்த.பா.3948)

என்ற பாடல் வலியுறுத்தும். சில சமயங்களில் பேருரு கொண்ட அனுமனும் வீரவாகுதேவரும் தேவை ஏற்பட்ட பொழுது அணு உருவும் கொண்டுள்ளனர். அவர்களுடைய இச் செயல்கள் கடவுள் மீது கொண்ட அதீத பக்தியை விளக்குவதாகவும் இறைபக்தியால் பெறும் உருமாற்றத்தை விளக்குவதாகவும் உள்ளது.

முடிவுரை

கம்பராமாயணத்தில் சுந்தரகாண்டத்தில் தொண்டின் உறைவிடமாகவும் பக்தியின் முழு வடிவமாகவும் விளங்குகிற அனுமனின் மீவியல் ஆற்றலைக் கம்பர் அதீத கற்பனையுடன் விளக்கியுள்ளார். கந்தபுராணத்தில் வீரவாகுதேவரின் பேராற்றலை மகேந்திரகாண்டத்தில் கச்சியப்ப சிவாசாரியார் மீவியலுடன் புனைந்துள்ளார். மகேந்திர மலையில் அனுமன் தன் பாதத்தை வைத்ததும் அம்மலை சரிந்து வெடித்து பூமியின் அடித்தளத்தைச் சென்று சேர்ந்ததும், கந்தமாதன மலையின் மீது வீரவாகுதேவர் ஏறி நின்றதும் அந்த மலை அவரைச் சுமக்க முடியாமல் நடுங்கி பிளந்து மண்ணில் ஆழ்ந்ததும் அவர்களின் மீவியல் ஆற்றலை வெளிப்படுத்துகின்றது. அனுமன், வீரவாகுதேவர் ஆகிய இருவரும் கொண்ட பக்தி மேலீட்டால் பேருருவையும் அணு வடிவத்தையும் எடுத்ததோடல்லாமல் ஆகாயத்தில் செல்லுகின்ற அதீத செயலையும் புரிந்துள்ளதைக் காணமுடிகின்றது. இதன் மூலம் அனுமனும் வீரவாகுதேவரும் இறை பக்தியிலும் அதீத ஆற்றலிலும் ஒன்றிய நிலையில் இருவரும் பல இடங்களில் ஒரே மாதிரியான செயல்களைச் செய்துள்ளமையைக் காணமுடிகின்றது. இதிலிருந்து கம்பரும் கச்சியப்பரும் அனுமனையும் வீரவாகுதேவரையும் ஒரே கண்ணோட்டத்தில் படைத்துள்ளதை அறியலாம்.

References

Acharya, B.S., (2013) Thirukkural, Narmatha Publications, Chennai.

Ilampooranar, (1985) Tholkappiyam – Porulathikaram, Tamil University, Thanjavur.

Manickam, A., (1990) Kandhapuranam, Vardhamanan Pathipagam, Chennai.

Poovannan, (2000) Kambaramayanam, Vardhamanan Publications, Chennai.

Ramalingam, N., (1988) Kandhapurana aaraichi, Madurai Kamaraj University, Madurai.

Venkatasamy Naataar, N.M., Duraisamy Pillai, S., (1985) Manimekalai, South India Saiva Siddhantha Works Publishing Society Limited, Chennai.

Funding: NIL
Acknowledgement: NIL
Conflict of Interest: NIL
About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License